தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.

தொலைபேசி: 044 – 22201337

மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

*******

ஆணை எண். 098/ந/2021

நாள். 14.02.2022

| | | |
|---|---|---|
| திரு.மதுரை பரூக் அகமது,<br>வாணியம்பாடி. | – | முறையீட்டு மனுதாரர் |
| ஆணையாளர்,<br>வாணியம்பாடி நகராட்சி. | – | எதிர்மனுதாரர் |

வாணியம்பாடி, காதர்பேட்டை, ஆசிரியர் காலனி, முதல் கிராஸ், முதல்மாடி 4/75 என்ற எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு.மதுரை பரூக் அகமது, என்பவரின் 11.10.2021 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 18.10.2021 அன்று பெறப்பட்டு 098/2021 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு, கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு, கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

வாணியம்பாடி, காதர்பேட்டை, ஆசிரியர் காலனி, முதல் கிராஸ், முதல்மாடி 4/75 என்ற எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு.மதுரை பரூக் அகமது, என்பவர் தமது 11.10.2021 நாளிட்ட மனுவில் கீழ்காணுமாறு புகார்களை தெரிவித்துள்ளார்:-

திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி, கோட்டை பட்டேல் யாகூப் தெருவில் வாணியம்பாடி நகராட்சிக்கு சொந்தமான 27000 சதுரஅடி சொத்தை பொது ஏலத்திற்கு விட 27.10.2015 அன்று வாணியம்பாடி நகராட்சி ஆணையர் அவர்கள் அறிக்கை வெளியிட்டார். இதை தொடர்ந்து நடைபெற்ற ஏலத்தில் கலந்து கொள்ள பலரும் ஆர்வமாக இருந்த நிலையில் நகர்மன்ற தலைவி நிலோபர்கபில் தலையீட்டால் அவர்கள் ஏலத்தில் கலந்து கொள்ளவிடாமல் ஆணையரால் தடுக்கப்பட்டனர். இந்நேர்வில் எதிர்மனுதாரர்கள் ஆணையாளர் நகர்மன்றத் தலைவியின் பினாமிகளான திரு.M.நூருல் அமீன், திரு.சையது அமீன் அகமது மற்றும் திரு.T.அப்துல் வாஹித் ஆகியோர் கூட்டு சேர்ந்து சாதுர்யமாக திட்டம் தீட்டியதின் விளைவாக

திரு.M.நூருல் அமின் அவர்கள் உயர்ந்த பட்ச ஏல தொகை கேட்ட ஒப்பந்ததாரராக ஆணையாளரால் அறிவிக்கப்பட்டார்.

மேற்சொல்லப்பட்ட ஒப்பந்தத்தில் கலந்து கொண்ட மற்ற ஒப்பந்தாரர்களும் மற்றும் பொதுமக்களும் சேர்ந்து அநியாயமாக நடந்த இந்த ஏலத்திற்கு தங்கள் எதிர்ப்பை தெரிவித்தனர். பொதுமக்கள் மற்றும் சமூக அமைப்புகள் சேர்ந்து இது சம்பந்தமாக உயர் அதிகாரிகளிடத்தில் 30.06.2018 அன்று புகார்கள் அளிக்கப்பட்டது. ஆனால் அப்புகார்களின் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இந்த ஒப்பந்த அறிவிப்பு சம்பந்தமாக நகர்மன்றத்திடம் அனுமதி பெறவில்லை. தற்போதைய சந்தை மதிப்பு சம்பந்தமாக மற்ற துறைகளின் அனுமதியும் பெறவில்லை. நகர்மன்ற தலைவியுடன் கூட்டு சேர்ந்து திட்டமிட்ட நோக்கத்துடன் செயல்பட்டு தமிழ்நாடு கட்டிடம் (குத்தகை மற்றும் வாடகை கட்டுப்பாடு) சட்டம் 1960-ல் கூறப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு புறம்பாக முழு ஏல விகிதத்தை ரூ.7500/- என நிர்ணயித்து திரு.நூருல் அமீன் அவர்கள் உயர்ந்த ஏலத் தொகை கேட்ட ஏலதாரராக ஆணையாளர் அறிவித்துள்ளார். திரு.நூருல் அமீன் அவர்களுக்கு சொற்ப மாத வாடகை ரூ.8150/- என நிர்ணயித்து 3 வருடங்களுக்கு மேற்சொல்லப்பட்ட சொத்து குத்தகைக்கு விடப்பட்டது.

இது சம்பந்தமாக தகவல் அறியும் உரிமை சட்டத்தில் ஆணையரிடம் விவரம் கேட்டபோது மேற்சொல்லப்பட்ட சொத்தானது வாணியம்பாடி சார்பதிவாளர் அவர்களால் அளித்த தற்போதைய சந்தை மதிப்புபடியும் மற்றும் பொதுப்பணி துறையில் நிர்ணயிக்கப்பட்ட நியாயமான வாடகை அடிப்படையில் தான் மேற்சொல்லப்பட்ட சொத்து குத்தகைக்கு விடப்பட்டது என பொய்யான தகவலை அளித்துள்ளார். ஆனால் இத்துறைகள் தங்களுடைய 13.02.2020 அன்று அளித்த பதிலில் இத்தகவலை மறுத்துள்ளன.

ஆவணங்களை பரிசீலனை செய்ததில் நகர்மன்ற தலைவியின் நிர்பந்தத்திற்கு உள்ளாக்கப்பட்டு நகராட்சி ஆணையாளர் அவர்கள் எதிர்மனுதாரர்களுடன் கூட்டு சேர்ந்து குற்றசதிகளில் ஈடுபட்டு எதிர்மனுதாரர் திரு.நூருல் அமீன் அவர்களுக்கு குத்தகை வழங்கியதன் மூலம் அரசுக்கு நிதி இழப்பு ஏற்படுத்தியுள்ளது தெளிவாகிறது என மனுதாரர் தெரிவித்துள்ளார்.

மனுதாரர் மேலும் “இந்த போலியான ஏலம் முடிந்தபின் நகர்மன்ற தலைவியிடம் இருந்து பெரிய திருப்தி அளிக்கும் வகையில் உதவிகளை பெற்று இரண்டாவது மனுதாரர் திரு.நூருல் அமீன் அவர்கள் குத்தகைக்கு எடுத்த சொத்தை நகர்மன்ற தலைவியின் சொந்தகாரர் திரு.T.அப்துல் வாஹித் என்பவருக்கு ஒப்படைத்தார்.

அரசு அதிகாரியான ஆணையாளர் மற்றும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதியான நகர்மன்ற தலைவி ஆகியோர் உயர் ஒருமைபாடு ஒழுக்கம் தார்மீக வீரியம் மற்றும் லஞ்சத்திற்கு அடிபணியாதவர்களாக இருத்தல் வேண்டும்.

இது சம்பந்தமாக தகவல் அறியும் உரிமை சட்டத்தின் மூலம் பலதுறைகளிடம் விவரங்கள் கேட்டதில் அதிர்ச்சிகரமான தகவல்கள் பெறப்பட்டன. இந்நேர்வில் எதிர்மனுதாரர்கள் நான்கு பேரும் கூட்டாக சேர்ந்து சதி செய்து மற்ற துறைகளிடம் அனுமதி பெறாமலும் அனைத்து கட்டாயமாக்கப்பட்ட விதிமுறைகளை மீறி செயல்பட்டு அரசுக்கு நிதி இழப்பு ஏற்படுத்தி உள்ளனர். தகவல் அறியும் உரிமை சட்டத்தில் ஆணையாளரிடம் விவரங்கள் அளிக்க கேட்ட போது 10.07.2019 அன்று அளித்த பதிலில் ஆம்பூரை சேர்ந்த திரு.நூருல் அமீன் என்பவர் மேற்காணும் சொத்துக்கு குத்தகை உரிமைதாரர் என்று தெரிவித்துள்ளார். ஆனால் 29.08.2019 அன்று அளித்த பதிலில் வாணியம்பாடியைச் சேர்ந்த திரு.சையது அமீன் அகமது என்பவர் குத்தகை உரிமைதாரர் என பதில் அளித்துள்ளார். இதிலிருந்து எதிர்மனுதாரர்கள் நான்கு பேரும் கூட்டு சேர்ந்து அரசுக்கு நிதி இழப்பு ஏற்படுத்தி உள்ளனர்.

நான்காவது எதிர்மனுதாரர் மேற்கூறிய சொத்துகளை தன் வசம் கையகப்படுத்திய பின் அச்சொத்தை 50 நாற்சக்கர வாகனங்கள் மற்றும் 300 இரு சக்கர வாகனங்கள் பார்க் செய்ய வசதிகள் உள்ள பூங்காவாக மாற்றியமைத்துள்ளார். இதன்மூலம் மாதம் ரூ.2.50 இலட்சம் வருமானம் பெறுவதாகவும், ஆனால் அரசுக்கு வெறும் ரூ.8150/- மட்டும் மாத வாடகை அளிப்பதாகவும் மனுதாரர் தெரிவித்துள்ளார். நகர்மன்ற தலைவியுடன் ஆணையர் கூட்டு சேர்ந்து இதன் மூலம் ரூ.1,60,95,785/- அரசுக்கு நிதி இழப்பு ஏற்படுத்தியுள்ளார். இந்த சிறு நகராட்சியில் பெருந்தொகையானது எதிர்மனுதாரர்களால் தவறாக பயன்படுத்தப்பட்டுள்ளது மேலும் இந்நகராட்சியில் மேலும் பல சொத்துக்களும் நகர்மன்றத் தலைவி தலையீட்டால் விதிமுறைகளுக்கு புறம்பாக குத்தகைக்கு விடப்பட்டுள்ளது.

அரசுக்கு நிதி இழப்பு ஏற்படுத்தும் தனியாரிடமிருந்து அத்தொகையை மீட்க அதிகாரிகள் அலட்சியமாக இருந்ததற்கும் கடமை தவறியமைக்கும் வழக்கு தொடர வேண்டும். இந்நேர்வில் அரசு சொத்தை முறைகேடான வழியில் குத்தகை எடுத்த எதிர்மனுதாரர்களை ஊழல் தடுப்பு சட்டம் 1998ல் இந்திய தண்டனைகள் சட்டம் 409, 420, 465 மற்றும் உட்பிரிவு 13(1) (d), 13 (2) ல் தண்டிக்க வேண்டும்.

மேற்சொல்லப்பட்ட சொத்து முறைகேடான வழியில் ஏலம் விடப்பட்டதை எதிர்த்து சென்னை உயர் நீதி மன்றத்தில் நீதி பேராணை எண்.19927/2021 ல் வழக்கு தொடரப்பட்டு எதிர்மனுதாரர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுத்து அவர்களிடமிருந்து அரசுக்கு ஏற்பட்ட நிதி இழப்பை மீட்க ஆணையிடுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டது. இந்த வழக்கில் மனுதாரர் தன்னுடைய புகார் சம்பந்தமாக சம்பந்தப்பட்ட அதிகாரியை அணுகுமாறு 20.09.2021 அன்று அளித்த தீர்ப்பில் நீதிமன்றம் உத்திரவிட்டது.

இந்நேர்வில் ஆணையாளரால் 10.12.2015 அன்று ஒப்பந்தம் விடப்பட்ட சம்பந்தப்பட்ட உத்தரவை ரத்து செய்யுமாறும் மேலும் எதிர்மனுதாரர்கள் நான்கு பேர்கள் மீதும் கடுமையான நடவடிக்கை எடுத்து அரசுக்கு ஏற்பட்ட ரூ.1,60,95,785/- தொகையை அவர்களிடமிருந்து மீட்க

உத்திரவிடுமாறும் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவரை மனுதாரர் வேண்டிக் கேட்டுக்கொண்டுள்ளார்''.

2) மனுதாரரின் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 03.11.2021 நாளிட்ட கடிதம் மூலம் ஆணையருக்கு ஆணையிடப்பட்டது. மேலும், மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான வாணியம்பாடி நகராட்சி ஆணையாளர் ஆகியோரை இம்முறைமன்ற நடுவத்தில் 09.12.2021 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு அழைப்பாணை அனுப்பப்பட்டது. 09.12.2021 அன்றைய நேரடி விசாரணைக்கு மனுதாரர் ஆஜராகவில்லை, அன்றைய தேதியில் வாணியம்பாடி நகராட்சி ஆணையாளர் சார்பாக வருவாய் உதவியாளர் ஆஜராகி கீழ்கண்டவாறு வாக்குமூலம் அளித்துள்ளார்.

''வாணியம்பாடி நகராட்சியில் பட்டேல் யாகூப் தெருவில் பழைய சார்பதிவாளர் அலுவலகம் இயங்கி வந்த நகராட்சிக்கு சொந்தமான கட்டிடத்தை குத்தகை விடப்பட்டது தொடர்பான நகராட்சி ஆணையரின் 07.12.2021 நாளிட்ட கடிதத்தை, வாணியம்பாடி நகராட்சி ஆணையரின் விளக்கமாக எடுத்துக்கொள்ள வேண்டி அக்கடிதத்தை இம்முறைமன்றத்தை கேட்டுக் கொள்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

நகராட்சி ஆணையரின் 07.12.2021 நாளிட்ட அறிக்கையில் வாணியம்பாடி நகராட்சியின் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு நாள்.19.10.2015 வாயிலாக இந்நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்.13, பட்டேல் யாகூப் தெருவில் உள்ள பழைய சார்பதிவாளர் அலுவலகம் இயங்கி வந்த கட்டிடத்தை நகராட்சிக்கு வருவாய் பெருக்கும் வகையில் 27.10.2015 ம் தேதி பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதன்படி பொது ஏலத்தில் மொத்தம் 2 நபர்கள் கலந்துக்கொண்டனர். அவற்றில் திரு.எம்.நூருல் அமீன் என்பவர் உயர்ந்த பட்ச ஏலமாக ரூ.8150/- மாத வாடகைக்கு கேட்டுள்ளார்.

வாணியம்பாடி நகர்மன்ற தீர்மானம் எண்.636 நாள்.26.11.2015ன்படி கட்டிடத்திற்கான உயர்ந்த பட்ச ஏல கேள்வியை ஏற்றுக்கொண்டு தீர்மானம் நிறைவேற்ற அனுமதி வழங்கியது.

வாணியம்பாடி நகராட்சியின் கடிதம் 10.12.2015ல் உள்ள செயல்முறைகளின்படி பழைய சார்பதிவாளர் கட்டிடத்தின் குத்தகை உரிமத்தை திரு.எம்.நூருல் அமீன் என்பவருக்கு 10.12.2015ம் தேதி உத்தரவின் வாயிலாக 15.12.2015 முதல் 14.12.2018 வரை குத்தகை அனுபவித்துக் கொள்ள உத்தரவிடப்பட்டுள்ளது. அதன்படி முதல் மூன்று ஆண்டு காலம் முடிவுற்று அடுத்த மூன்று ஆண்டிற்கு குத்தகையை புதுப்பித்து நடத்தி வருகிறார். இந்நிலையில் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை அவர்களிடம் புகார் மனு எண்.98/M/2021 நாள்.30.11.2021-ல், மேற்கண்ட பழைய சார்பதிவாளர் அலுவலகத்தின் கட்டிடத்தில் நகராட்சி பொது ஏல நிபந்தனைகளின்படி குத்தகையை நடத்த விதிகளை பின்பற்றாமல் வாகனங்கள் நிறுத்தும் இடமாக மாற்றி பயன்படுத்திக்கொண்டு நகராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்படுத்தியுள்ளார் என தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் வாணியம்பாடி நகராட்சி அலுவலக அறிவிப்பு ந.க.எண்.2575/அ1 நாள்.06.12.2021 வாயிலாக நகராட்சியின் கட்டிடத்தில் இயங்கி வந்த பழைய சார்பதிவாளர் அலுவலகத்தின் இடத்திற்கான குத்தகையை ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு இடத்தை காலி செய்து கொடுக்க 15 நாட்கள் அவகாசம் வழங்கி குத்தகைதாரருக்கு அறிவிப்பு கடிதம் வழங்கப்பட்டுள்ளதாக வாணியம்பாடி நகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார்.

இந்நேர்வில் மனுதாரரது மனு, வாணியம்பாடி நகராட்சி ஆணையரின் அறிக்கை, நகராட்சி வருவாய் உதவியாளர் அளித்த வாக்குமூலம் ஆகியவை கவனமுடன் பரிசீலனை செய்யப்பட்டன.

இந்நேர்வில் வாணியம்பாடி நகராட்சிக்கு சொந்தமான பட்டேல் யாகூப் தெருவில் உள்ள புகாருக்குட்பட்ட நிலமானது 2015 ஆம் ஆண்டு ஒப்பந்ததாரருக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. இது 2015 ஆம் ஆண்டு நடைபெற்றுள்ள நிகழ்வாகும். இந்நிகழ்வு நடந்து ஆறு வருடங்களுக்கு மேலாகிறது. 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ சட்டம் 10 (3) (C) ன்படி முறையீட்டில் கூறப்பட்டுள்ள நிகழ்வு நடைபெற்ற தேதியிலிருந்து ஐந்து ஆண்டுகள் முடிவடைந்த பின்பு தாக்கல் செய்யப்பட்டுள்ள முறையீடு எதனையும் தொடர்பான பொருட்பாடுகளில் விசாரணை செய்தல் கூடாது என்று குறிப்பிட்டுள்ளது.

ஐந்து ஆண்டுகளுக்கு மேல் காலம் கடந்த நிகழ்வுகளுக்கு விசாரணை நடத்த இம்மன்றத்திற்கு அதிகாரம் இல்லாததால் மனுதாரர் நகராட்சி ஆணையரையே அணுக ஆணையிடப்படுகிறது. மேலும் சென்னை உயர்நீதிமன்றமும் இதை தான் ஆணையிட்டுள்ளது.

மேற்காணும் சூழ்நிலையில் மனுதாரர் மனு மீது தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் நடவடிக்கை எடுக்க இயலாததால் மனுதாரர் மனு மீதான மேல் நடவடிக்கையை கைவிட இம்முறைமன்றம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2022 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 14 ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. மதுரை பரூக் அகமது,
4/75, முதல் தளம், முதல் கிராஸ்,
ஆசிரியர் காலனி, வாணியம்பாடி -635 751
திருப்பத்தூர் மாவட்டம்.

2) ஆணையாளர்,
வாணியம்பாடி நகராட்சி.
வாணியம்பாடி – 635 751.

3) திரு.M.நூருல் அமீன்,
89/57, நஸ்ருல்தீன் தெரு,
பிளவர் கார்டன், ஆம்பூர் 635 802.

4) திரு.சையத் அமீன் அகமது,
நெ.5/83, D.V.G. நகர், நியூ டவுன்,
வாணியம்பாடி 635 752.

5) திரு.T.அப்துல் வாஹித்,
நெ.624–A-22, ஒஞ்சி தெரு,
முஸ்லீம்பூர், வாணியம்பாடி 635 751.

6) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
நெ.75, சாந்தோம் மெயின் ரோடு,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 28.

7) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
நெ.75, சாந்தோம் மெயின் ரோடு,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்.

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
சென்னை–600 032